பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 81331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆவணி 2 (18—8—72) வெள்ளி

வெளியூர்: ஆவணி 3 (19—8—72) சனி [இதழ்: 55

## இலங்கைத் தமிழர்கட்குத் தனிக் கொடி

கொழும்பு, ஆக. 18—

இலங்கைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் செயற்குழு யாழ்ப்பாணத்தில் கூடி, ஸ்ரீலங்காவிலுள்ள தமிழர்களுக்கு ஒரு தனிக் கொடி பற்றி முடிவு செய்தது.

இக்கொடியில், சிவப்பு நிறப் பின்னணியில் பொன்மயமான உதயசூரியன் பொறிக்கப்பட்டிருக்கும்.

# கங்கை — காவிரி இணைப்புக்குப் புதியமுட்டுக்கட்டை

## அரசியல் சட்டம் இதிலும் குறுக்கீடு!

### நாடாளுமன்றத்தில் புதிய சட்டம் வரும்

புதுடில்லி, ஆக 18—

கங்கை—காவிரி இணைப்புத் திட்ட வேலைகள் இந்த ஆண்டு சுதந்தர நாளன்று துவக்கி வைக்கப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டது; ஆனால், இது செயல்படவில்லை; காரணம், இதற்கும் அரசியல் சட்டம் குறுக்கிடுவதே யாகும்.

'மாநிலங்களிடையேயான நதி நீர்த் திட்டங்கள் நாடாளுமன்றத்தின் ஒப்புதலுடன் செயல்படுத்தப்படலாம்' என்று அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது; ஆகவே, நாடாளுமன்றத்தில் முடிவு செய்யப்பட்ட பின்னர்தான் இதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமாம். மத்திய சட்டத் துறையும், முதலில் நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றும்படி பாசனத் துறையிடம் கூறியிருந்ததாகத் தெரியவருகிறது.

எனவே, அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தில் இதுகுறித்து ஒரு மசோதா கொண்டுவரப்படலாம் என்றும், அதன் பிறகே கங்கை—காவிரி இணைப்புக்கான திட்டமிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரியவருகிறது.

கங்கை — காவிரி இணைப்புத் திட்டம், நாடு முழுவதையும் வளப்படுத்தும் ஒரு திட்டமாகக் கருதப்படுகிறது; இந்தத் திட்டத்தில் மத்திய அரசும்—பல மாநில அரசுகளும் மிகுந்த அக்கறை கொண்டிருக்கின்றன.

'இத்திட்டம் இயலக்கூடியதே' என்று இந்திய நிபுணர்கள் ஆய்ந்தறிந்து கருத்துத் தெரிவித்திருந்தபோதிலும், அத்திட்டத்திற்கு ஐ. நா.-வின் யோசனையையும் பெறுவது என்று முடிவு செய்யப்பட்டது; அதன்படி ஐ. நா. குழுவும் இங்கு வந்து பரிசீலித்தது, 'திட்டம் இயலக்கூடியதே' என்று அறிவித்தது.

திட்டத்தை ஆக. 15-ம் நாள் துவக்கிவைக்கலாம் என்று முன்னாள் திட்ட அமைச்சரான சி. சுப்பிரமணியம் அறிவித்திருந்தார்.

இதற்குள், இப்படிப்பட்ட திட்டம் தங்கள் மாநிலத்தை பாதிக்கும் என்று மேற்கு வங்க அரசு அச்சம் தெரிவித்தது; 'ஹூக்ளி ஆற்றில் கங்கை ஆற்று வெள்ளம் விடப்பட்டால்தான் ஆண்டு முழுவதும் கல்கத்தா துறைமுகத்தில் கப்பல்கள் வந்துபோக முடியும்; ஆகவே, கங்கை வெள்ளத்தைத் திருப்பிவிடுவது எங்களுக்குப் பாதகமானதாகும்' என்று அது கூறியது; எனினும், இந்தப் பிரச்சினையும் தீர்க்கப்பட்டுவிட்டது.

இப்போது நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றுவதுதான் முதலில் செய்யப்பட வேண்டிய ஒன்றாக இருக்கும்.

## மத்திய அரசு அதிகாரிகள் இல்லங்களில் சோதனை

### மக்களவையில் தகவல்

புதுடில்லி, ஆக. 17—

"1970—71, 1971—72 ம் ஆண்டுகளில், ஊழல் நடத்தை மூலம் பணம் சேர்த்ததாகச் சந்தேகத்தின் மீது மத்திய அரசின் முதல் வகுப்பு—இரண்டாவது வகுப்பு அதிகாரிகள் இடையே 37 சோதனைகள் நடத்தப்பட்டன"

என்று மக்களவையில், உள்துறை துணையமைச்சர் ராம் நிவாஸ் மிர்தா, தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"சோதனையின் போது ஏதும் பறிமுதல் செய்யப்படவில்லை; மத்தியப் புலனாய்வு நிறுவன ஆய்வின் அடிப்படையில் சோதனைகள் நடத்தப்பட்டன."

கே. லக்கப்பா:—"முன்னாள் ஐ. சி. எஸ், ஐ. ஏ. எஸ் அதிகாரிகள், டில்லியிலும்—மாநிலத் தலைநகரங்களிலும் பெரிய மாளிகைகள் கட்டி, பணம் குவித்ததுண்டா?"

அமைச்சர்:—"அவ்வாறு பொதுவாகப் புகார் கூறுவது சரியல்ல; குறிப்பிட்ட சம்பவங்கள் அரசிடம் தெரிவிக்கப்பட்டால், புலன் விசாரணை நடத்தப்படும்."

## தாமிரப் பட்டயத்தில் இந்தி — தென்னகத்தின் குமுறல்

### மத்திய அரசிடம் விளக்கம் கேட்க நாடாளுமன்ற தி.மு.க. நடவடிக்கை

புதுடில்லி, ஆக. 18—

விடுதலை வெள்ளி விழாவை முன்னிட்டு வழங்கப்பட்ட தாமிரப் பட்டயங்களில் இந்தி எழுத்துக்கள் மட்டுமே பொறிக்கப்பட்டிருந்தது குறித்து மத்திய அரசிடம் விளக்கம் கேட்பது—என்று, நாடாளுமன்ற தி. மு. க. குழு முடிவு செய்திருக்கிறது.

இப்பிரச்சினை நேற்றே நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்டது! 'மத்திய அரசின் இச்செயல், மொழிப் பிரச்சினையில் கடைபிடிக்க வேண்டிய நியாயமான நடைமுறைகளைத் திட்டமிட்டு மீறியதாகும்' என்று தி. மு. கழக உறுப்பினர்கள் கருதுகின்றனர்.

'குறைந்தபட்சம், இந்தியுடன் ஆங்கிலத்தையும் பயன்படுத்தியிருக்கலாம்' என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த விடுதலை வீரர்கள், 'எங்களுக்கு வழங்கப்பட்ட தாமிரப் பட்டயங்களில் என்ன எழுதியிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை, என்று புகார் கூறினர்.

இந்த நிகழ்ச்சியில், தி. மு. கழக உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட உணர்ச்சியைக் காங்கிரசு உறுப்பினர்களும் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

நாடாளுமன்ற தி. மு. க. குழு, இது குறித்துப் பேச சம்பந்தப்பட்ட அமைச்சரை சந்திக்கவிருக்கிறது.

## ஆங்கிலத்தில் எழுத இடமில்லையாம்!

### மொழிபெயர்ப்பு கையில் கொடுக்கப்பட்டதாம்

### தாமிரப் பட்டயத்தில் இந்தி — மத்திய அமைச்சரின் நொண்டிச் சமாதானம்

புதுடில்லி, ஆக. 18—

தாமிரப் பட்டயத்தில் இந்தி மட்டுமே பொறிக்கப்பட்டிருப்பதற்கு நாடாளுமன்ற மேலவையிலும் உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

பல பட்டயங்களில்—அதைப் பெறுவோரின் பெயர் குறிக்கப்படவில்லை என்றும் அவர்கள் குறை கூறினர்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் துணையமைச்சர் கே. சி. பந்த் கூறியதாவது:—

"பெரும்பாலான பட்டயங்கள், பெறுபவர்களின் பெயர் பொறித்தே வழங்கப்பட்டிருக்கிறது; ஆனால், சிலருடைய பெயர் முதலில் தயாரிக்கப்பட்ட பட்டியலில் இடம் பெறவில்லை; அவர்களது பெயர் பிறகு சேர்க்கப்பட்டபோது, பட்டயத்தில் அவர்களுடைய பெயர்களைச் சேர்க்க முடியாமல் போய் விட்டது."

வீரேந்திரபட்டீல் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதிலளித்ததாவது:—

"தாமிரப் பட்டயங்களில் இடம் குறைவாக இருந்ததால் ஆங்கில வாசகம் பொறிக்கப்படவில்லை; அரசாங்கத்தால் கௌரவித்து வழங்கப்படும் எல்லா விருதுகளிலும் இந்தி மொழியே பயன்படுத்தப்பட்டு வருகிறது; எனவே, தாமிரப் பட்டயங்களிலும் அப்படியே பயன்படுத்துவது என்று கருதப்பட்டது; ஆயினும், தாமிரப் பட்டயம் பெற்ற இந்தி தெரியாத விடுதலை வீரர்களின் உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டு அந்தப் பட்டயத்துடன் தாமிரப் பட்டயத்தில் எழுதப்பட்டுள்ள வாக்கியங்களின் ஆங்கிலமொழி பெயர்ப்பும் வழங்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டது."

"இதுவரையில், குடியரசுத் தலைவர் பெயராலேயே விருதுகளும்—பரிசுகளும் வழங்கப்பட்டிருந்த முறையை மாற்றி, இப்போது ஏன் தலைமையமைச்சரின் பெயர் தாமிரப்பட்டயத்தில் திணிக்கப்பட்டது?"

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழக முதல்வர் கலைஞர் நம்பிக்கை

### சட்டப் பேரவையில் நிலை விளக்கம்

சென்னை, ஆக. 18—

கங்கை—காவிரி இணைப்பு குறித்து இன்று சட்டப் பேரவையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பொதுப் பணித்துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா பதிலளித்தார்; அப்போது முதலமைச்சர் கலைஞர் குறுக்கிட்டு நிலை விளக்கம் தந்தார்.

"கங்கை—காவிரி இணைப்புத் திட்டத்தில் சட்டச் சிக்கல் எழுந்துள்ளதாகப் பத்திரிகையில் இன்றுதான் செய்திவந்துள்ளது; அதுபற்றி ஆராய்ந்துதான் கருத்து தெரிவிக்க இயலும்"

என்று அமைச்சர் சாதிக் பாட்சா ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

'கங்கை — காவிரி இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றத் தடையாக உள்ள சட்டச் சிக்கலைத் தீர்க்க அரசியல் சட்டத்தைத் திருத்துமாறு இந்த அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளுமா?"

என்று கேட்கப்பட்டது; இதற்கு முதலமைச்சர் குறுக்கிட்டுப் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"இங்கு இந்த மன்றத்தில் கேள்விகள் எழுப்புவதனை அறிந்து நாடாளுமன்றம், சட்டத்தைத் திருத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று நம்புகிறேன்."

மேலும் ஒரு கேள்விக்கு முதலமைச்சர் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"கங்கையையும் — காவிரியையும் இணைக்கும் திட்டத்தின் முதல் கட்டமாக, 'கங்கைப் பகுதிகளில் உள்ள நதிகளையும் — காவிரிப் பகுதியில் உள்ள நதிகளையும் இணைத்தால், பிறகு கங்கையும்—காவிரியும் இணைவது எளிதாகிவிடும்' என்று தமிழக அரசு யோசனை தெரிவித்துள்ளது."

## மத்திய அமைச்சர்கள் சுற்றுப்பயணச் செலவு

### மாநிலங்களவையில் தகவல்

புதுடில்லி, ஆக. 18—

"மத்திய அரசின் அமைச்சர்கள்—துணை அமைச்சர் 1970—71-லும், 1971—72 லும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் சுற்றுப்பயணம் செய்ததற்கான மொத்தச் செலவு ரூ. 55 இலட்சமாகும்"

என்று உள்துறைத் துணையமைச்சர் மோசின் நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்.

# சேரி ஒழிப்பில் தமிழகத்தின் மகத்தான சாதனை

## ஆளுநர் கே. கே. ஷா மனந்திறந்த பாராட்டு

### குடிசைமாற்று வாரிய அடிக்கல் நாட்டு விழாவில் உரை

சென்னை, ஆக. 17—

தியாகராயநகர் தொகுதியில் உள்ள ஆலயம்மன் கோவிலுக்கு அருகில் அண்மையில் தீ விபத்திற்குள்ளான குடிசைப் பகுதியில் ரூ 67 இலட்சம் செலவில் சுமார் 600 குடியிருப்புக்களைக் கட்டும் திட்டத்திற்கு ஆளுநர் கே. கே. ஷா அடிக்கல் நாட்டினர்.

102 மனைகளைக் கொண்ட இந்த இடம், மாம்பலம் ஏரிக்கரைத் திட்டத்தின் தொடர்ச்சியாகக் குடிசைமாற்று வாரியத்தினால் கட்டப்படுகிறது; இத்திட்டம் பகுதியில், மாண்டி பஜார் அமைந்துள்ள தியாகராயர் சாலையின் ஓரம் கிடைக்கும் பெற்றுள்ள சுமார் 15,400 சதுர அடிப் பரப்பில இரண்டு மூன்று அடுக்குக் கட்டடமாகச் கடைகள் வைப்பதற்கும், ஓட்டல் வைப்பதற்கும் நவீன முறையில் ரூ. 7 இலட்சம் செலவில திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது; இதிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் மூலம் கட்டடம் கட்டுவதற்காகும் செலவை ஐந்தாண்டுகளில் பெற்றுவிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி ஆளுநர் பேசுகையில், சேரிச் சீரமைப்பு என்பது பூதாகாரமான வேலை என்றும், இந்தியா முழுவதும் சேரிகளைச் சீரமைத்து 1.27 கோடி குடியிருப்புக்களைக் கட்டுவதற்கு ரூ 9,000 கோடி செலவாகும் என்றும், இதில் தமிழ்நாட்டிற்கு மட்டும் ரூ. 1,200 கோடி தேவைப்படும் என்றும் கூறினர்.

குடிசை மாற்று வாரியத் தலைவர் இராம. அரங்கண்ணலையும், குடிசை மாற்று வாரியத்தை அமைத்த முதலமைச்சரையும் பாராட்டிய ஆளுநர் கே. கே. ஷா, 'இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒன்று தான் குடிசை மாற்று வாரியம் அமைத்தும் பணி புரிகிறது' என்றார்.

குடிசை மாற்று வாரியம் இந்தப் பகுதியில் குடியிருப்புக்களைக் கட்டுவதோடு, கடைகள் -- ஓட்டல்களுக்கான கட்டடங்கள் கட்டி வருமானம் தேட எண்ணியுள்ளது பற்றி ஆளுநர் குறிப்பிட்டுப் பேசுகையில், 'இந்த முயற்சிக்கு, இப்பகுதியில் வாழும் மக்கள் தங்கள் ஒத்துழைப்பைத் தர வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

## தவணைத் தொகையைக் குறைக்க முதலமைச்சர் யோசனை

விழாவிற்குத் தலைமைவகித்த முதலமைச்சர் கலைஞர் பேசுகையில், குடிசை மாற்று வாரியம் தவணை முறையில் விலைக்குக் கொடுக்கும் வீடுகளுக்கு மாதத் தவணை ரூ. 40 என்று இருப்பதை ரூ. 30 என்று ஆக்கலாமா என்று அரசு யோசித்துக் கொண்டிருப்பதாகக் கூறினர்; 'இந்தப் பரிசீலனையின் முடிவு ஏழை மக்களுக்குச் சாதகமானதாக இருக்கும்' என்றும் அவர் சொன்னர்.

முதலமைச்சர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"குடிசை மாற்று வாரியம் கட்டித் தருகின்ற வீடுகளுக்கு மாதம் ரூ. 50 நியாயமான வாடகை தரப்பட வேண்டும்; வாரியம் ரூ 15 மட்டுமே வாடகையாகப் பெறுகிறது; மீதமுள்ள ரூ. 35-ஐ ஈடுகட்ட வேண்டிய பொறுப்பு அரசைச் சார்ந்தது.

ஆகவே, இந்நிலையில், இந்த இழப்பை ஈடுகட்டுவதற்குக் குடிசை மாற்று வாரியம் வேறு வகையில் வருமானம் தேட வேண்டும்.

இந்த நோக்கத்தோடு கடைகளையும் -ஓட்டல்களையும் குடிசை மாற்று வாரியம் கட்டுவதற்குப் பொதுமக்கள் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்."

விழாத் துவக்கத்தில் குடிசை மாற்று வாரியத் தலைவர் இராம. அரங்கண்ணல் அனைவரையும் வரவேற்ருர்.

குடிசை மாற்று வாரிய தலைமைப் பொறியர் கே. ஆர். இராமசாமி திட்டம் பற்றிய விவரங்களை எடுத்துரைத்தார்.

குடிசை மாற்று வாரிய உறுப்பினர் வி. முனுசாமி, கே. எம். சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., ஆகியோரும் விழாவில் பேசினர்கள்.

வாரிய நிர்வாகப் பொறியர் எஸ். மாரியம்பன் நன்றி கூறினர்."

## வேளாண்மைக் கல்லூரியில் படித்த பட்டதாரிகள்

### அனைவருக்கும் வேலை கொடுக்கப்பட்டுவிட்டது

சென்னை, ஆக. 17

தமிழ்நாட்டிலுள்ள மூன்று வேளாண்மைக் கல்லூரிகளிலிருந்தும் தேறி வெளிவரும் எல்லாப் பட்டதாரிகளுக்கும், அரசு வேளாண்மைத் துறையில் வேலை தரப்படும் -- என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

1971—72-ல் தேறிவந்த 250 வேளாண்மைப் பட்டதாரிகளும் தனை வேளாண்மை அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுவிட்டனர்; இதுவன்றி, வெளிமாநில வேளாண்மைப் பட்டதாரிகளும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

1972 மே மாதத்தில் படித்துத் தேறிய பட்டதாரிகளில் 63 பேர் தவிர அனைவருக்கும் வேலை தரப்பட்டுவிட்டது; இந்த 63 பேர் சம்பந்தமாக நியமன உத்தரவு அனுப்பப்பட இருக்கிறது

அரசு வெளியிட்ட ஒரு பத்திரிகைக் குறிப்பில் இது கூறப்பட்டிருக்கிறது.

## கருநாடக மாநிலம்

### பெயர் மாற்றம் பற்றி மத்திய அமைச்சர்

"மைசூர் மாநிலத்தை 'கருநாடக மாநிலம்' எனப் பெயர் மாற்றம் செய்யவேண்டும் என்ற மாநில அரசின் கோரிக்கையை மத்திய அரசு பரிசீலிக்கும்"

என்று மக்களவையில், துணையமைச்சர் மோசின் தெரிவித்தார்

நாட்டின் பலவேறு இடங்களில் -- வெளிநாடுகளில்...

# 'திறமைமிக்க தமிழக இளைஞர் தனிச் சிறப்புடன் பணியாற்றுகின்றனர்'

## 'பண்பாட்டுப் பெருமைகளால் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக விளங்குகிறது'

### 'விடுதலை தந்த வாய்ப்புக்களை இயன்ற வரையில் அரசினர் நாட்டின் நலனுக்குப் பயன்படுத்தி வருகின்றனர்'

சென்னை, ஆக. 15—

"தமிழ்நாட்டின் வரலாறு இந்திய நாட்டின் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்திருக்கிறது.

விடுதலைப் போரில் தமிழ்நாட்டு மக்கள் பெற்ற பங்கு நமது பாரம்பரியத்தின் பெருமைமிக்க அம்சமாகும் — பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்ருகும்.

விடுதலைப் போரில் பெருந்துணிவு காட்டிப் பங்குகொண்ட வீரர் சிலர் இன்று நம்முடன் உள்ளனர்.

தமிழக அரசும் — மக்களும் விடுதலை தந்த வாய்ப்புக்களை, இயன்ற வரையில் நாட்டின் நலனுக்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

பெருமைமிக்க கடந்த காலமும், செறிந்த கலாச்சார ஆன்மீக மரபுகளும் கொண்ட தமிழகம், இந்தியாவிலேயே தலைசிறந்து முன்னணியில் இருக்கும் மாநிலமாக விளங்குகிறது; இதற்கான பெருமைகள் அனைத்தும் இம்மாநிலத்தின் நிலையான — திறமையான நிர்வாகத்திற்கும், சாமானிய மக்களுக்குச் சேவை செய்வதில் ஆர்வமும் -- நோக்கும்கொண்ட சிறப்புமிக்க தலைவர்களுக்கு உரித்தானதாகும்.

கடந்த 25 ஆண்டுகளில் இம்மாநிலத்தில் தொழில் துறையின் அடித்தளம், கணிசமான அளவில் வலுப் பெற்றிருக்கிறது; அரசுத்துறை — கூட்டுத்துறை — கூட்டுறவுத் துறைகள் நன்கு செயல்படுவதன்மூலம், தொழில் வளமாக்கும் வாய்ப்பு நன்கு அமைந்திருக்கிறது.

கடின உழைப்புக்கு அஞ்சாத தமிழக உழவர்கள் பசுமைப் புரட்சிக்கும் பெரும் பணி ஆற்றியுள்ளனர்!

திறமைமிக்கத் தமிழக இளைஞர்களும் -- பெண்களும் நாட்டின் பல்வேறு இடங்களிலும் -- வெளிநாடுகளிலும் தனிச் சிறப்புடன் பணியாற்றி வருகின்றனர்.

தமிழகத்தை மேலும் செழிப்பனவாகவும், வளம் நிறைந்ததாகவும் ஆக்குவதில் மட்டுமன்றித் தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதிலும், இந்தியப் பொருளாதாரத்தை வலுப்பெறச் செய்வதிலும் கூடத் தமிழக மக்கள் பெரும் பங்குகொண்டு உதவுவர் என்பதில் எனக்கு ஐயமில்லை."

**-- ஆளுநர் கே. கே. ஷா**

(விடுதலை நாள் வெள்ளி விழாவையொட்டி வானொலியில் ஆற்றிய உரையில்)

## சென்னை மாநகராட்சியின் நிதி வசதி

### மேம்படுத்துவது பற்றி ஆய்வு

புதுடில்லி, ஆக. 17—

சென்னை மாநகராட்சி நிதி வசதியைக் கொண்டே எவ்வாறு நடத்தலாம் என்பதை ஆராயுமாறு தமிழக அரசை, மத்திய அரசு கேட்டிருக்கிறது.

இந்தத் தகவலை, மத்திய பொதுப் பணித் துறை அமைச்சர் டி. பி. சட்டோபாத்யாயா, நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்.

தற்போதைய சென்னையின் சுற்றுப்புற நில மேம்பாடு -- போக்குவரத்து -- வீட்டு வசதியும், சேரி ஒழிப்பும் -- குடிநீர் வழங்கல் -- சாக்கடை வசதி -- சமுதாய வசதிகள் ஆகிய துறைகளிலும் தற்போது சென்னை நகரைச் சார்ந்துள்ள செங்கற்பட்டு -- திருவள்ளூர் -- கும்மிடிப்பூண்டி நகர்களிலும், 1971 முதல் 1991-வரை இருபதாண்டுக் காலத்தில் மேம்பாடு காண இந்தத் திட்டத்தின் மூலம் அரசு எண்ணியுள்ளது.

"மாநில அரசு இப்போது இத்திட்டத்தை மறு ஆய்வு செய்து வருகிறது" என்று அவர் மேலும் கூறினர்.

# தமிழ்நாடெங்கும் விடுதலை வெள்ளி விழா

## தியாகிகளுக்குப் பொன்னாடை -- பாராட்டு நிகழ்ச்சிகள்

### மாவட்டத் தலைநகரங்களில் அமைச்சர்கள் பங்கேற்பு

சென்னை, ஆக. 17—

இந்த ஆண்டு வெள்ளி விழாவை முன்னிட்டுத் தமிழகமெங்கும் விடுதலை நாள் வெள்ளி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

முதலமைச்சர் கலைஞர் சென்னை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்; மற்ற எல்லா அமைச்சர்களும் ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சென்று நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் சுதந்தரம் போராட்ட வீரர்கள் கௌரவிக்கப்பட்டனர்; மாவட்டக் கலெக்டர்கள் அவர்களுக்குத் தேநீர் விருந்தளித்தனர்; பொன்னாடைகளும் போர்த்தினர்.

ஏழைகளுக்கு உணவு அளித்தும், கலைநிகழ்ச்சிகள் நடத்தியும் விழாக்கள் சிறப்பிக்கப்பட்டன.

தமிழகத்திலுள்ள எல்லா நகராட்சிகளும் — ஊராட்சிமன்றங்களும் திங்களன்று இரவு கூடி, வீரத் தியாகிகட்கு வணக்கம் தெரிவித்தன.

### மதுரை

மதுரையில் காந்தி நிலை அரங்கில் விடுதலை நாள் வெள்ளி விழா கொண்டாடப்பட்டது; மாவட்ட ஆட்சித் தலைவர் சீதாராமதாஸ் தலைமைதாங்கினர்.

சுதந்தரப் போராட்டத் தியாகிகள் 100 பேருக்கு, விழாவில் இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டது; அவற்றை அமைச்சர் க. அன்பழகன் வழங்கினர்.

விழாக் குழு சார்பில் மதுரை மேயர் எஸ். முத்து, 300 தியாகிகட்கும், நேதாஜி படை வீரர்கள் 20 பேருக்கும் பொன்னாடை போர்த்தினர்.

தியாகிகள் பட்டியலில் உள்ள மதுரை பழைய கலெக்டரும் முதலமைச்சரின் அந்தரங்கச் செயலாளருமான இலட்சுமிகாந்தன் பாரதி, அவருடைய தாயார் இலட்சுமி பாரதி ஆகியோருக்கும் பொன்னாடை போர்த்தப்பட்டது.

அவரது தகப்பனர் கிருஷ்ணசாமி பாரதி தியாகிகளுக்கான 'தாமிரப் பட்டய' விருது பெற டெல்லிக்குச் சென்றிருப்பதால், அவருக்குரிய பொன்னாடையை இலட்சுமிகாந்தன் பாரதியின் மனைவி பெற்றுக்கொண்டார்.

அண்மைப் போரில் மரணமடைந்த இராணுவத்தினர் மனைவியர் 6 பேருக்குத் தையல் இயந்திரங்களும் -- ரேடியோக்களும் அளிக்கப்பட்டன.

### திருச்சி

விடுதலை நாள் வெள்ளி விழாவையொட்டி திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தியாகிகளுக்கு, திருச்சி தேவர் மன்றத்தில் பாராட்டு விழா நடந்தது; விழாவில் 264 தியாகிகள் கலந்துகொண்டார்கள்; அவர்களுக்கு தொழிலாளர் நல அமைச்சர் என். வி. நடராசன் பொன்னாடை போர்த்திப் பேசினர்.

விழாவில், அன்பில் தர்மலிங்கம் எம்.எல்.ஏ., வி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., கி. ஆ. பெ. விசுவநாதம், நாடாளுமன்ற உறுப்பினர் சுந்தரம், பழனியாண்டி, பி. பி. கே. இராசா சிதம்பரம், மற்றும் பலர் பேசினர்.

தொடக்கத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் டி. பி. பாரதி அனைவரையும் வரவேற்றுப் பேசினர்.

திரு. துரைசாமி நன்றி கூறினர்.

உதவிப் பணம் பெறுகின்ற 384 தியாகிகளுக்கு வரவேற்பு விழாவும் --தேனீர் விருந்தும் திருச்சி வாசவி மகாலில் நடைபெற்றது.

விழாவில் அமைச்சர் என். வி நடராசன் கலந்துகொண்டு தியாகிகளைப் பாராட்டிப் பேசினர்.

விழாவுக்கு கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமை தாங்கினர்; மாவட்ட ஆட்சித் தலைவர் பாரதி நன்றி கூறினர்.

வெள்ளி விழாவையொட்டி அலங்கார வண்டிகளின் ஊர்வலமும் நடைபெற்றது; ஊர்வலத்தை காந்தி மார்க்கெட்டு அருகிலிருந்து அமைச்சர் என். வி. நடராசன் பார்வையிட்டார்.

திருச்சியை அடுத்த அரியமங்கலத்திலுள்ள அரசாங்க அச்சகத்தில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் என். வி. நடராசன் கலந்துகொண்டு பேசினர்.

விழாவுக்கு வி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ, தலைமை தாங்கினர்; ஆர். சுப்பிரமணியம் நன்றி கூறினர்.

### தஞ்சை

தஞ்சையில் விடுதலை நாள் வெள்ளி விழாவையொட்டி யானைகள் முன் செல்ல -- அலங்கார வண்டிகளின் அணிவகுப்பு நடந்தது; இதை கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பார்வையிட்டார்; சிவகங்கைப் பூங்காவிலிருந்து ஊர்வலம் புறப்பட்டது.

இந்த ஊர்வலம், தஞ்சை நகர முக்கிய வீதிகள் வழியாகச் சென்று -- அண்ணா சிலையைக் கடந்து கோர்ட்டு ரோடு வழியாக இராஜராஜ சோழன் சிலை திடலை வந்து அடைந்தது.

இந்த ஊர்வலத்தை, ஒரு மாடியிலிருந்தவாறு அமைச்சர் நெடுஞ்செழியன் பார்வையிட்டார்.

அன்று காலை ஆயுதப் போலீசுப் படைத் திடலில் போலீசு அணிவகுப்பு நடைபெற்றது; தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் கே. ஏ. நம்பியார் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்; அதிர்வேட்டுகள் முழங்கின; போலீஸ் அணிவகுப்பு மரியாதையையும் கலெக்டர் ஏற்றுக்கொண்டார்.

கலப்புத் திருமணம் செய்துகொண்ட அஞ்சம்மாள் -- மாணிக்கம் தம்பதிகளுக்கு தங்கப் பதக்கமும், பாராட்டு இதழும் கலெக்டர் வழங்கினர்.

இந்த விழாவையொட்டி நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகிகளுக்குச் சிவகங்கை பூங்காவில் உள்ள பெத்தண்ணன் கலை அரங்கில் விருந்து கொடுக்கப்பட்டது; தஞ்சை மாவட்ட கலெக்டர் நம்பியார் தலைமைதாங்கினர்.

தஞ்சை இராஜராஜ சோழன் சிலைத் திடலில் கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில், விடுதலை நாள் வெள்ளி விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

### கோவை

கோவையில், விடுதலை நாள் வெள்ளிவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது; கோவை சிதம்பரம பிள்ளை பூங்காவில், மாவட்ட ஆட்சித் தலைவர் சிவகுமார் கொடியேற்றினர்.

அதன்பின், போலீசார் மற்றும் மாணவ-மாணவிகள் நடத்திய அணிவகுப்பு மரியாதையை கலெக்டர் ஏற்றுக்கொண்டார்.

மாலையில் ஊர்வலம் நடந்தது; ஊர்வலத்தை, அமைச்சர் எஸ்.ஜே. சாதிக்பாட்சா, கலெக்டர் சிவகுமார் ஆகியோர் வடகோவையில் அமைக்கப்பட்டிருந்த மேடையிலிருந்து பார்வையிட்டனர்.

ஊர்வலம் ஆர்.எஸ். புரம் சாஸ்திரி மைதானததை அடைந்தது; அங்கு நடந்தகூட்டத்துக்கு அமைச்சர் எஸ்.ஜே.சாதிக்பாட்சா தலைமை தாங்கிப் பேசினர்; மற்றும் பலரும் பேசினர்.

### சேலம்

விடுதலைநாள் வெள்ளி விழாவை யொட்டி, சேலம் அரிசிப் பாளையம் இராஜேந்திரா சத்திரத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டது, அலங்கரிக்கப்பட்ட யானை, லாரிகள், ஊர்வலத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

ஊர்வலம் சேலம் புத்துணர்வு கலை மன்றத்தை அடைந்ததும் அங்கு பொதுக் கூட்டம் நடந்தது.

கூட்டத்தில் அமைச்சர் க. இராசாராம் கலந்துகொண்டு 182 தியாகிகளுக்கு பொன்னாடை போர்த்தினர்.

இராணுவ வீரர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பிலோமினவுக்கு தையல் இயந்திரமும், கோவிந்தம்மாளுக்கு ரேடியோவும்வழங்கினர்.

சுதந்தர நாள் வெள்ளி விழா நினைவுச் சின்னம் அமைக்க சேலம் 5 ரோடு அருகில் அடிக்கல் நாட்டப்பட்டது.

### சிவகங்கை

இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கையில் நடந்த விடுதலை நாள் வெள்ளிவிழா கொண்டாட்டத்தில் அமைச்சர் எஸ். இ. ராமசந்திரன் கலந்து கொண்டார்.

### திருநெல்வேலி

நெல்லையில் நடைபெற்ற விடுதலை நாள் விழாவில் கூட்டுறவு அமைச்சர் சி. பா. ஆதித்தனர் கலந்துகொண்டார்.

விழாவையொட்டி கலெக்டர் அலுவலகத்தில அமைக்கப்படவிருக்கும் வெள்ளி விழா நினைவுச் சின்னத்துக்கு அமைச்சர் அடிக்கல் நாட்டினர்.

நெல்லை சந்திப்பு இந்து உயர்நிலைப் பள்ளிக்கூட மைதானத்தில் அனைத்துக் கட்சியினரும கலந்துகொண்ட பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அமைச்சர் சி. பா. ஆதித்தனர், மாவட்ட செயலாளர் அழகியநம்பி, பெப்பின் பர்னந்து (சுதந்தரா), நெல்லை கணபதி (இ.காங்), ஆணியப்ப பிள்ளை (பழைய காங்), ஆண்டியப்பன் (பி. சோ.) வாசுதேவன் [ஜனசங்கம்) ஆகியோர் பேசினர்.

### நாகர்கோவில்

குமரி மாவட்டம் நாகர்கோவிலில் நடந்த விடுதலை நாள் வெள்ளி

(6-ம் பத்தி பார்க்க)

(8-ம் பத்தித் தொடர்ச்சி)

விழாவில் அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர் மு. கண்ணப்பன் கலந்துகொண்டார். அரசாங்க உதவிப் பணம் பெறும் சுதந்தரப் போராட்டத் தியாகிகள் 25 பேர்களுக்கு வெள்ளிப் பதக்கம் வழங்கினர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் சார்பில் நிறுவப்பட்ட சுதந்தர வெள்ளி விழா நினைவுச் சின்னத்தை அமைச்சர் மு. கண்ணப்பன் திறந்துவைத்தார்; இந்த விழா நாகர்கோவில் எஸ்.எல்.பி. மைதானத்தில் நடந்தது.

### தென்னாற்காடு

கடலூர் மாவட்டக் கலெக்டர் சண்முகசிகாமணி அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

மாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி கலந்துகொண்டார்.

தியாகிகள் கௌரவிக்கப்பட்டனர்.

வேலூர் கோட்டை வெளி மைதானத்தில் பொதுக்கூட்டம் நடந்தது; அமைச்சர் செ. மாதவன் தலைமைதாங்கினர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் வி. ஆறுமுகம் வரவேற்றுப் பேசினர்.

வேலூர் நகராட்சித் தலைவர் மா. பா. சாரதி, மாவட்ட தி. மு, க. செயலாளர் தோப்பூர் திருவேங்கடம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரைமுருகன், ஏ. கே. துரைசாமி, மற்றும் வி. எஸ். கிருஷ்ணன் (இ. கம்யூ), அபிபுல்லா (மு. லீக்), பத்மநாபன (சுதந்திரா) ஆர். ஜீவரத்தினம் (இ. காங்.), எம். எஸ் கிருஷ்ணமூர்த்தி (தமிழரசு), ஏ. ஆர், தாமோதரன் (குடியரசு), ஏ. எல். சி. கிருஷ்ணசாமி நாயுடு ஆகியோர் பேசினர்.

கோட்டையில் உள்ள விளையாட்டுத் திடலில் வட ஆற்காடு மாவட்டத் தியாகிகளுக்குப் பாராட்டு விழா நடந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் வி. ஆறுமுகம் தலைமைதாங்கினர்.

அமைச்சர் செ. மாதவன் விழாவில் கலந்துகொண்டு தியாகிகளைப் பாராட்டிப் பேசினர்.

### வட ஆற்காடு

விடுதலை நாள் வெள்ளி விழா நிகழ்ச்சி திங்களன்று இரவு வேலூரில் துவக்கிவைக்கப்பட்டது.

நகராட்சியில் 14-ம் நாள் இரவு விருந்து ஒன்று நடத்தப்பட்டது; கலெக்டர் தலைமைவகித்தார்.

விளையாட்டு அரங்கில் கொடி ஏற்றி வைத்து -- அணிவகுப்பு மரியாதையைக் கலெக்டர் ஏற்றுக் கொண்டார்.

நகராட்சி அலுவலகத்தில், நகராட்சித் தலைவர் மா, பா. சாரதி கொடியேற்றினர்.

காந்தியடிகள்-- அறிஞர் அண்ணா சிலைகள அலங்கரிக்கப்பட்டிருந்தன.

### செங்கற்பட்டு

செங்கற்பட்டு மாவட்டத் தலைநகரான காஞ்சியில் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அணிவகுப்பு மரியாதையை ஆர். டி. ஓ சுப்பிரமணியம் ஏற்றுக் கொண்டார்.

# விலைவாசி உயர்வுக்குக் காரணம்

## இந்தியப் பொருளாதாரத்தில் உள்ள கோளாறுதான்

### அமைச்சர் ப. உ. சண்முகம் சுட்டிக்காட்டும் உண்மை

"எந்தப் பண்டமானாலும், உற்பத்தி பெருகினால் விலை குறையும்; ஆனால் உணவுத் தானியங்கள் -- சர்க்கரை போன்ற பண்டங்களின் உற்பத்தி பெருகி -- அவற்றின் விலையும் உயர்ந்துள்ளது; இந்த விந்தையான நிலைமைக்குப் பொருளாதாரத்தில் காணப்படும் கோளாறுதான் காரணமாகும்.

'இந்தக் கோளாறை நீக்க மாநிலங்களுக்கு அதிகாரம் இல்லை -- மத்திய அரசுக்குத்தான் உண்டு; இம்மாதிரியான கோளாறுகள் அகற்றப்படுவதை உறுதி செய்யுமாறு திட்டக் குழுவைக் கேட்டுக்கொள்கிறேன்; இல்லாவிடின், 'காரிபி ஹடோ' (வறுமையை ஒழிப்போம்') முழக்கத்துக்குப் பொருளே இராது; வெறும் முழக்கம் ஏழைகட்கு உதவாது"

என்று உணவு அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் கூறினர்; தமிழ்நாடு வர்த்தக சபை மாநாட்டில் அவர் பேசியதாவது:—

"சர்க்கரை வியாபாரத்தில் காணப்படும் சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகள் -- சர்க்கரைக் கார்டுகள் துஷ்பிரயோகம் போன்ற சமூகத் தீமைகளை அகற்ற அரசுடன் ஒத்துழைக்கும்படி வர்த்தகச் சமூகத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொருளாதாரத்தில் காணப்படும் தவறுகள் அகற்றப்படும் வரையில் விலைகளைக் கட்டுப்படுத்துவது என்பது இயலாது; இதற்கு மாநில அரசுகள் -- மத்திய அரசுகள் இடையே ஒத்துழைப்பு அவசியமாகும்."

## வறுமையில் வாடும் பழம்பெரும் எழுத்தாளர்கள்

### தமிழக அரசு வழங்கும் உதவி நாவலர் விளக்கம்

சென்னை, ஆக. 17—

"பழம்பெரும் எழுத்தாளர்களுக்கு உதவிப் பணம் வழங்கும் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது"

என்று, சட்டப் பேரவையில் என். கிட்டப்பாவின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கூறினர்.

மேலும் துணைக் கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:—

"ஐம்பத்தெட்டு வயதுக்கு மேற்பட்ட கலைஞர்கள் -- எழுத்தாளர்கட்கு 1961-ம் ஆண்டு முதல் உதவிப் பணம் வழங்கப்பட்டு வந்தது; ரூ. 50 முதல் ரூ. 150 வரை வழங்க முன்வந்தது; தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் மூலம் இவ்வுதவிப் பணம் வழங்கப்பட்டது; இவ்வுதவிப் பணத்தில் மூன்றில் இரண்டுப் பகுதியை மத்திய அரசும்— ஒரு பகுதியை மாநில அரசும் கொடுத்து வந்தன; 1971-ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு தனது உதவியை நிறுத்தி விட்டது; எனவே, முழுத்தொகையையும் இப்போது மாநில அரசே கொடுத்து வருகிறது.

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளைக்கு மாதம் ரூ. 250; பரலி சு. நெல்லையப்பருக்கு ரூ 100 வழங்கப்பட்டது; மயிலை சீனிவேல்சாமி, பி. வி. இராமசாமி ஆகியோர் மாதம் ரூ 75 அளிக்கப்பட்டு வருகிறது."

கா. வேழவேந்தன் :—"எழுத்தாளர்கள் யார் யார் என்று பட்டியல் தயாரித்து, அவர்களுக்கெல்லாம் உதவிப் பணம் வழங்கப்படுமா ?"

அமைச்சர் :—"அப்படிப் பட்டியல் தயார் செய்ததில், 200-க்கு மேற்பட்டோர் எழுத்தாளர்களாக உள்ளனர்; இந்தப் பட்டியல் மேலும் வளர்ந்துகொண்டே போகும்; எல்லோருக்கும் உதவி செய்ய நிதிவசதி இல்லை; வருவாய் ஏதுமில்லாத வயோதிக எழுத்தாளர்கட்கு மட்டுமே இந்த உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

இதையல்லாமல், ஆண்டுதோறும் 20 நூல்களுக்கும் -- நூலாசிரியர்கட்கும் மாதம் -- ஊக்கம் பணமும் அளிக்கப்பட்டு வருகிறது.

இறந்துவிட்ட எழுத்தாளர் குடும்பங்கட்கு உதவிப்பணம் வழங்கும் திட்டம் இல்லை.

## மருத்துவமனைக்கு அருகில் டாக்டருக்கு வீடு

### நிதிநிலைக்கு ஏற்பத் திட்டம் நிறைவேற்றப்படும்

சென்னை, ஆக. 16—

"மணியாற்றும் மருத்துவமனைக்கு அருகிலேயே டாக்டர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படும்"

என்று, மக்கள் நல்வாழ்வு அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் கூறினர்.

சட்டப் பேரவையில் இதுபற்றிக் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அவர் பதில் அளித்ததாவது:—

"தமிழ்நாடு மருத்துவ நடைமுறைச் சட்டத்தின்படி, அரசினர் மருத்துவ மனைகளிலுள்ள மருத்துவ அதிகாரிகள், தங்களுக்கு அரசாங்கக் குடியிருப்பு இல்லங்கள் அளிக்கப்படாவிட்டால், தங்கள் வசதிப்படிநோயாளிகளுக்கும் பகலிலோ அல்லது இரவிலோ மருத்துவ உதவி அளிக்கத் தயாராக இருப்பதற்கு மருத்துவமனைகளுக்கு அருகிலேயே குடியிருக்கவேண்டும்,

"மருத்துவ அதிகாரிகளுக்கு மருத்துவமனை அருகிலேயே வீடு கட்டிக்கொடுக்க வேண்டும் என்பது கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது; நிதிநிலை வசதிக்கு ஏற்ப இது படிப்படியாக நிறைவேற்றப்படும்."

## அம்பத்தூரில் டாக்டர் கலைஞர் நற்பணி மன்றம்

23—7—72-ல் அம்பத்தூர் தி. மு. க. கிளை அவைத் தலைவர் ஏ. வாழ்வரசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், 'டாக்டர் கலைஞர் நற்பணி மன்றம்' துவக்கப்பட்டுக் கீழ்க்காணும் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

அவைத் தலைவர் :— நே. ஆதிமூலம் : செயலாளர் : ஏ. ஏழுமலை; துணைச் செயலாளர் : இர. உமாகாந்தன் ; பொருளாளர் : அ. மா. மணவாளன் : செயற்குழு உறுப்பினர்கள் : காத்தலிங்கம், வேலு சண்ணப்பன், செல்வராஜி முனுசாமி, சங்கர், எஸ். வரதராசன், அ. மா. அலெக்சாண்டர், வேலாயுதம், ராஜி, அரங்கநாதன். ராமமூர்த்தி, ராதா.

## கண் சிகிச்சை முகாம்கள்

### அதிகப்படுத்துவது பற்றி அமைச்சர்

சென்னை, ஆக. 12—

"முதலமைச்சர் கண் சிகிச்சை முகாம் திட்டத்தை மாநிலம் முழுவதும் பெருக்க ஏற்பாடு செய்யப்படுமா ?"

என்று சட்டப் பேரவையில், பி எஸ். மணியம் கேட்டார்.

அமைச்சர் க. அன்பழகன் :— "கண் சிகிச்சை முகாமகள் அதிகரிப்பது, நிதி வசதியைப் பொறுத்திருக்கிறது

'ஏதாவது ஒரு கண் சிகிச்சை முகாமை நடத்தும் செலவை ஏற்றுக்கொள்ளும்படி பெரிய தொழிற்சாலைகளைக் கேட்டுக்கொண்டிருக்கிருேம்; எந்த அளவுக்கு அவர்கள் ஒத்துழைப்புத் தருகிருர்களோ அந்த அளவுக்குத் திட்டம் வெற்றி பெறும்.

"கண்களில் சதை வளர்ந்து அறுவைச் சிகிச்சை நடந்திருந்தால், அவர்களில் பெரும்பாலான ஏழைகட்கு இலவசமாகக் கண்ணாடி கொடுக்கிருேம்; மற்றவர்கட்கு எழுதிக் கொடுக்கப்படுகிறது; அவர்கள் வெளியில் கண்ணாடி வாங்கிக்கொள்கிருர்கள்."

கா. வேழவேந்தன் :— "கிராமப் புறங்களிலும் இந்த முகாம்கள் துவக்கப்படுமா ?"

அமைச்சர் :— "அறுவைச் சிகிச்சை செய்துகொண்டவர்கள் 7 நாள் தங்கியிருந்து உணவும், சிகிச்சையும் பெற வேண்டும்; ஆகவே 2 அல்லது 3 தாலுகாக்களை இணைத்து அங்கு முகாம்கள் நடத்தப்படுகின்றன."

## தமிழகத்தில் தொலைபேசித் தொழிற்சாலை

### டில்லியிடம் கோரிக்கை -- செ. மாதவன் தகவல்

சென்னை, ஆக. 17—

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் அமையவிருக்கும் தொலைபேசிக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தமிழகத்தில் அமைக்குமாறு மத்திய அரசுக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது; மத்திய அரசின் அனுமதி கிடைத்த பின்னர் அதனைத் தமிழகத்தில் எங்கே அமைக்கலாம் என்பது பற்றி யோசிக்கலாம்"

என்று, தொழில் அமைச்சர் செ மாதவன் அவர்கள், சட்டப் பேரவையில், என். கிட்டப்பாவின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

## ஒன்றியத் தலைவர்கட்கு தனி முத்திரை

### அரசு பரிசீலனை

சென்னை, ஆக. 17—

'ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்குத் தனியானதோர் சின்னத்தை முத்திரையாகக் கொடுப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது"

என்று கல்வி -- உள்ளாட்சித்துறை அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சட்டப் பேரவையில், பி. எஸ். மணியன் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"இப்படித் தனி முத்திரை வழங்குவதால் ஏற்படும் சாதக பாதகங்களை ஆராய்ந்த பின்னரே அரசு முடிவெடுக்கும்" என்ருர் அவர்.

# சென்னை மாநகர எல்லை-- விரிவாக்குவது பற்றி ஆய்வு

சென்னை, ஆக. 17—

"சென்னை நகர எல்லையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது"

என்று, கல்வி- உள்ளாட்சித்துறை அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

திரு. என். கிட்டப்பாவின் கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் தெரிவித்த விவரம் வருமாறு:—

"வீட்டு வசதி வாரியம் அமைந்துள்ள புறநகர்ப் பகுதிகளை மாநகருடன் இணைக்க வேண்டும் என்று வாரியத் தலைவர் கோரியிருக்கிருர்.

சாலைகள், வடிகால் — குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வசதியாகத் தென் சென்னையில் புறநகர்ப் பகுதியில் உள்ள இந்திரா நகர் — பெசண்ட் நகர் — சாஸ்திரி நகர் — கழிக்குன்றம்—திருவான்மியூர் ஆகிய 420 ஏக்கர் பரம்புள்ள பகுதிகளையும், மேற்குச் சென்னைப் புறநகர்ப்பகுதியில் உள்ள கொரட்டூர்ப் பகுதியையும் மாநகருடன் இணைக்கக் கோரியுள்ளார்; இதுபற்றி வீட்டு வசதி வாரியத் தலைவரிடம் விவரம் கேட்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகிறது."

# கறுப்புப் பணத்தை ஒழிக்க வழி

## நாடாளுமன்ற உறுப்பினர் யோசனை

புதுடில்லி, ஆக. 18—

"கறுப்புப் பணத்தை ஒழித்துக் கட்டுவதற்காக உடனடியாகப் பத்து ரூபாய் நோட்டுக்களைச் செல்லுபடியற்றதாக்க வேண்டும்; இப்படிச் செய்யப்பட்டாலன்றி, கள்ளப் பணத்தின் வலிமையைக் குறைக்க முடியாது"

என்று, நாடாளுமன்ற இடது கம்யூனிஸ்டு உறுப்பினர் ஜே திர்மயி பாசு யோசனை தெரிவித்திருக்கிறார்.

கள்ளப் பணத்தை ஒழித்துக் கட்ட வாஞ்சு குழு தெரிவித்த யோசனையைச் சுட்டிக்காட்டி மேற்கண்ட கருத்தை அவர் வெளியிட்டார்; இத்தொடர்பில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:—

"1970 சூன் நிலவரப்படி, புழக்கத்தில் இருந்துவந்த மொத்த நோட்டுக்களின் மதிப்பு ரூ 4,247.19 கோடியாகும்; இதில் மூன்றில் ஒரு பங்கு -- அதாவது ரூ. 1,480 78 கோடி — பத்து ரூபாய் நோட்டுக்களாகும்.

ரூ. 2,114.77 கோடி – அதாவது புழக்கத்தில் உள்ள நோட்டு மதிப்பில் பாதி – நூறு ரூபாய் நோட்டுக்களாகும்.

எனவே, நோட்டுக்களைச் செல்லுபடியற்றதாக்கும் நடவடிக்கை – குறிப்பாக பத்து ரூபாய் நூறு ரூபாய் நோட்டுகளைச் செல்லுபடியற்றதாக்க வேண்டியது அவசியமானதாகும்.

மேலும், பணம் – நகைகள் போன்றவற்றை வைத்துக் கொள்வதற்கும் உச்சவரம்பு நிர்ணயிக்க வேண்டும்.

வங்கிகளில் உள்ள பாதுகாப்பு அறைகளில் வைக்கப்பட்டிருக்கும் பொருள்களையும் கணக்கிட வேண்டும்; அதற்குத் தற்காலிகமாக – அவைகளைத் திரும்பப் பெறுவதற்குத் தடை விதிக்க வேண்டும்.

இவை அனைத்தும் ஒரே நாளில் செய்யப்பட்டால்தான், பலன் தரக்கூடியதாக அமையும்."

## அரசு விருது பெற்ற நாதசுர கலைஞர்கள்

### அமைச்சர் நாவலர் விளக்கம்

சென்னை, ஆக. 17—

"ஆண்டுதோறும் சிறந்த நாதசுர மேதைகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு விருதுகள் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?"

என்று சட்டப் பேரவையில் என். கிட்டப்பா கேட்டார்.

இதற்குக் கல்வியமைச்சர் நாவலர் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:—

"ஆண்டுதோறும் தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் மூலம் சிறந்த நாதசுரக் கலைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விருதுகள் வழங்கப்படுகின்றன.

இதுவரையில், திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளை, செம்பனார் கோவில் தட்சிணாமூர்த்தி பிள்ளை, திருவிடமருதூர் பி. எஸ். வீருசாமி பிள்ளை, இஞ்சிக்குடி பிச்சைக்கண்ணு பிள்ளை, திருவீழிமிழலை சிவ. சுப்பிரமணியபிள்ளை, சிதம்பரம் நடராச பிள்ளை, ஷேளிக்கரை பிச்சையப்பா பிள்ளை, நாமகிரிபேட்டை கிருஷ்ணன் ஆகியோர் விருது பெற்றுள்ளனர்.

மத்திய அரசின் விருதும் நாதசுர வித்துவான்களுக்கு வழங்கப்பட்டுள்ளன; டி. என். இராசரத்தினம் பிள்ளை, பி எஸ். வீருசாமி பிள்ளை, திருவீழிமிழலை சுப்பிரமணிய பிள்ளை ஆகியோர் மத்திய அரசின் விருதைப் பெற்றுள்ளனர்.

தவில் வித்துவான்களான உத்திராபதி பிள்ளை, முத்து வீருபிள்ளை, கும்பகோணம் தங்கவேல்பிள்ளை, கூறைநாடு கோவிந்தராச பிள்ளை, மாயூரம் பழனிவேலு பிள்ளை, நாராயணசாமி பிள்ளை ஆகியோர் விருது பெற்றுள்ளனர்.

## திருக்குறள் மாநாடு

சென்னை — இராயப்பேட்டை திருவள்ளுவர் மன்றத்தின் 14-ஆம் ஆண்டு விழாவும், நான்காம் திருக்குறள் மாநாடும் ஆக 19, 20 ஆகிய நாட்களில் சென்னை—இராஜாஜி மண்டபத்தில் நடைபெறும்.

19—8—72 மாலை 6 மணிக்கு மங்கள இசையுடன் கருத்தரங்கம் துவங்கும்; இராம. வீரப்பன் வரவேற்புரையாற்றுவார்; பேராசிரியர் மா. கி. தசரதன் துவக்கிவைப்பார்; குன்றக்குடி அடிகளார் தலைமைவகிப்பார்; சட்டப் பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் மலர் வெளியிடுவார்; அமைச்சர் மன்னை நாராயணசாமி மலரைப் பெற்றுக்கொள்வார்; பாவேந்தர் படத்தை அமைச்சர் நாவலர் திறந்துவைப்பார்; முதலமைச்சர் கலைஞர் சிறப்புரையாற்றுவார்; கே. ஏ. கிருஷ்ணசாமி எம்.பி. தீர்மானங்களை முன்மொழிவார்; ஏ. பி. சனார்த்தனம் எம்.எல்.சி., சே. விநாயகம், திருப்பூர் மொய்தீன் எம்.எல்.ஏ, ஏ.ஆர். பெருமாள் எம்.எல் ஏ. ஆகியோர் கருத்துரையாற்றுவர்.

20—8—72 காலை 9 மணிக்கு கவிதைப் பட்டிமன்றம்; தலைவர்: கவிஞர் சுரதா; துவக்கவுரை: ஔவை நடராசன்; பங்குகொள்வோர்: கவிஞர்கள் புலமைப்பித்தன், முருகுசுந்தரம், மணிமுடிச் சோழன், கோவேந்தன், தமிழ்ப்பித்தன், குமாரவேலன், கே.சி.எஸ். அருணாசலம், தஞ்சை வாணன், குடியரசு, உருவிக்கரம்பை சண்முகம்.

மாலை 6 மணிக்கு என். ஏ. அரிதாஸ் குழுவினரின் திரைப்பட மெல்லிசை விருந்து.

## குழுக் கூட்டங்கள்

### நெய்வேலி

நெய்வேலி-2 மந்தாரக்குப்பம் தி. மு. க. பொது உறுப்பினர்கள் கூட்டம் 20-8-72 மாலை 5-மணிக்கு என்.எல்.சி. பள்ளித் திடலில் நடைபெறும்; கழகச் சார்பு மன்றத் தோழர்களும் கலந்துகொள்ளுமாறு செயலாளர் ஆர். இராசவேலு கேட்டுக் கொள்கிறார்.

### வேலூர்

"வ. ஆ. மாவட்ட நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி நினைவு மன்றப் பொது உறுப்பினர் கூட்டம் 20—8—72 காலை 9-மணிக்கு வேலூர் டவுன் ஆலில் நடைபெறும்" எனச் செயலாளர் கே. மாசிலாமணி அறிவிக்கிறார்.

### பவானி

பவானி வட்ட தி. மு. க. கூட்டம் 21—8—72 பிற்பகல் 3-மணிக்கு பவானி மோகன் திரைப்பட அரங்கில் நடைபெறும்; வட்ட தி.மு.க. உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் இரா. துரை கேட்டுக் கொள்கிறார்.

### கரூர்

கரூர் நகர தி.மு.க. பிரதிநிதிகள் கூட்டம் 20-8-72 காலை 9-மணிக்கு அய்யாசாமி நாடார் சத்திரத்தில் நடைபெறும் என்று செயலாளர் பரமத்தி சண்முகம் அறிவிக்கிறார்.

## நடக்க இருப்பவை

### பொதுக்கூட்டம்

### 20--8--72

**சீர்காழி**

வட்ட விவசாயத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் சார்பில் பாராட்டு விழா; மாலை 6 மணிக்கு வைரவன் நேரடியில்; தலைவர்: ஏ. எஸ். வி. முருகையன்; பாராட்டுப் பெறுவோர்: அமைச்சர் மன்னை நாராயணசாமி; பாராட்டுவோர்: இரா. இராசன், கா. சுப்ரவேல் எம்.பி, டி. வி. சம்பத் எம்.எல்.ஏ., பி. வெங்கடகிருஷ்ணன், அ. நடராசன், கோ. மோகனதாசன், மற்றும் பலர்.

**சிதம்பரம்**

நகர தி.மு.க. சார்பில் மாலை 6-மணிக்கு டவுன் ஆல் திடலில்; தலைவர்: பொன். சொக்கலிங்கம் எம்.எல்.ஏ; பேசுவோர்: முதல்வர் கலைஞர், அமைச்சர்கள் என். வி. நடராசன், ப. உ. சண்முகம், க. இராசாராம், மன்னை நாராயணசாமி, எஸ். ஜே சாதிக் பாட்சா, மு. கண்ணப்பன், மதுரை மேயர் எஸ். முத்து எம்.எல்.சி., இலட்சிய நடிகர் எஸ்.எஸ் இராசேந்திரன் எம்.பி., முரசொலி மாறன் எம்.பி., திருப்பத்தூர் இரா மூர்த்தி, எம். செல்வராசு எம் எல் ஏ., தில்லை வில்லாளன் எம்பி, வி. வி. சாமிநாதன் எம்பி., வி. மாயவன் எம்.பி., இரா. சாம்பசிவம் எம். எல்.சி., செ. பெருமாள் எம். எல்.ஏ., கோ. துரையரசன், இரத்தின பாலதருசாமி எம், ஆர். கிருட்டினமூர்த்தி, இரா. சக்கரவர்த்தி, புலவர் முத்து தமிழரசன், தி. ப. மணி இரெ. சுப்பிரமணியம், சு. கோவிந்தராசன், முத்துக்குமரன், பாலசுப்பிரமணியம்.

## கட்டட ஆய்வாளர் குழு ஆண்டுவிழா

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் கட்டட ஆய்வாளர் குழுவின் ஆண்டுவிழா, 28-8—72 மாலை 6 15 மணிக்கு நந்தனம் சமூகக் கூடத்தில் நடைபெறும்; குடிசை மாற்று வாரியத் தலைவர் இராம. அரங்கண்ணல் எம் எல் ஏ. தலைமை வகிப்பார்; அமைச்சர் க. இராசாராம் வாழ்த்துரை வழங்குவார்; எஸ் டி. சோமசுந்தரம் எம்.பி, டி. வி. வாசுதேவன், ஜே. வால்டேர், கே. ஆர். இராமசாமி ஆகியோர் பேசுவார்.

# மத்திய அரசின் நிறுவனங்களில் எழும் தொழில் தகராறுகள்

## தீர்க்கும் பொறுப்பினை மாநில அரசுக்கு மாற்றும் பிரச்சினை

### சட்டப் பேரவையில் கேள்வி -- அமைச்சர் என் வி.என் பதில்

சென்னை, ஆக. 17—

"மத்திய அரசின் கட்டுப்பாட்டில் வரும் தொழிற்சாலைகளில் எழும் தகராறுகளைத் தீர்க்கும் பொறுப்பினையும் மாநில அரசுக்கு மாற்ற வேண்டும் - என்று மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளது உண்மையா? 'ஆம்' எனில், அதற்கான பதில் எதுவும் வரப்பெற்றுள்ளதா? அதன் விவரங்கள் யாவை?

என்று, சட்டப் பேரவையில், எச் வி. ஹண்டே கேட்டார்.

அமைச்சர் என்.வி நடராசன்:— "ஆம்; 'இதுபற்றிய முடிவு இனி நடக்கும் முத்தரப்பு கூட்டத்தின் முடிவுகளைச் சார்ந்திருக்கும்' என்று மைய அரசு பதிலளித்துள்ளது."

எச்.வி. ஹண்டே:—"அந்த அதிகாரத்தை மத்திய அரசே தனக்குவேண்டும் என்று கேட்டதா? அல்லது, 'முன்பிருந்த மத்திய -- மாநில கூட்டுப் பொறுப்பே இருக்கலாம்' என்று கூறியதா?'

அமைச்சர்:—"முத்தரப்பு மாநாட்டில், 'அந்த அதிகாரம் மாநில அரசுக்கே வேண்டும்' என்று கேட்கப்பட்டது; இது பற்றி அடுத்த முத்தரப்புக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படும்."

எச். வி. ஹண்டே:—'சிம்சன் போன்ற நிறுவனங்களில் தொழிலாளர்கள் பிரச்சினையைத் தீர்க்க மத்திய அமைச்சர்கள் முன் வந்தால் மாநில அரசு அதை ஏற்றுக் கொள்ளுமா அல்லது ஆட்சேபிக்குமா?"

அமைச்சர்:—"பிரச்சினைகளை நல்லெண்ணத்துடன் தீர்க்க முன் வந்தால் ஏற்போம; அங்கு, இருக்கும் நெருக்கடியை அதிகப்படுத்துவதாக இருந்தால் ஏற்க மாட்டோம்; சிம்சன் பற்றி மத்திய அமைச்சர்கள் திட்டவட்டமான முடிவு எதுவும் தெரிவிக்கவில்லை."

# வேலை நிறுத்தம்--கதவடைப்பு

## இந்திரா காங்கிரசு ஆளும் மாராட்டிரத்துக்கு முதலிடம்

புதுடில்லி ஆக. 18—

"1969, 1970 1971 ஆகிய மூன்று ஆண்டுகளில் அதிகமான வேலைநிறுத்தங்கள் -- கதவடைப்புகள் நடைபெற்ற மாநிலம்" என்ற பெருமை, மாராட்டிரத்தைச் சேர்ந்திருக்கிறது.

இத்தகவலை, மத்திய தொழிலாளர் நல அமைச்சர் காடில்கர், மக்களவையில் தெரிவித்தார்.

1971 சனவரியிலிருந்து துவங்கும் 18 மாத காலத்தில் நடைபெற்ற வேலைநிறுத்தம் -- கதவடைப்புகள் குறித்த மாநில வாரியான விவரங்களையும் அமைச்சர் வெளியிட்டார்:—

| | |
|---|---|
| மாராட்டிரம் | 982 |
| மேற்கு வங்கம் | 336 |
| கேரளம் | 302 |
| தமிழ்நாடு | 299 |
| பீகார் | 272 |
| உத்தரப் பிரதேசம் | 220 |
| மத்தியப் பிரதேசம் | 207 |
| குசராத் | 172 |
| ஆந்திரம் | 141 |
| மைசூர் | 125 |

இந்தக் காலத்தில் நாடு முழுவதிலும் 3,383 வேலைநிறுத்தங்கள் நடைபெற்று - 15 லட்சம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

## பண்பாட்டை குலைக்கும் படக் காட்சி

### கோஸ்லா குழுவின் பரிந்துரைக்கு எதிர்ப்பு

புதுடில்லி, ஆக. 17—

திரைப் படங்களைத் தணிக்கை செய்வது குறித்துப் பரிசீலித்து ஆலோசனை கூறுவதற்காக நியமிக்கப்பட்ட கோஸ்லா குழுவின் பரிந்துரைகளைப் பல மாநிலங்களும எதிர்த்திருப்பதாக மக்களவையில் தெரிவிக்கப்பட்டது.

"திரைப் படத்தில் முத்தம் கொடுத்தல்முதல் நிர்வாணக் காட்சிவரை ஓரளவு அனுமதிக்கலாம்" என்று குழு பரிந்துரைத்திருந்தது.

குழுவின் பரிந்துரைகளை ஆந்திரம், அரியானா, உ.பி, பஞ்சாப், மேற்கு வங்கம் ஆகிய அரசுகள் எதிர்க்கின்றன; ஆனால், கேரளமும் -- புதுவையும் ஆதரித்திருக்கின்றன; மற்ற மாநிலங்கள் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

தணிக்கைக் கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டுமென்ற பரிந்துரையை, இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கமும் -- தென்னிந்தியத் திரைப்பட வர்த்தகச் சபையும் வரவேற்றுள்ளன.

ஆயினும், நிர்வாணக் காட்சிகளையும் -- உதட்டோடு உதடு முத்தமிடுவதையும் தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபை எதிர்த்திருக்கிறது.

## மேற்குவங்கத்தில் தொழிலாளர் நிலை

### 28 இலட்சம் பேர் வேலையின்றி அவதி

கல்கத்தா, ஆக, 18—

மேற்கு வங்கத்தில் மொத்தம் 28 இலட்சம் பேர் வேலையின்றி இருப்பதாகக் கருதப்படுகிறது.

இங்கு காங்கிரசு அமைச்சரவை பதவியேற்ற பிறகு பல தொழிற்சாலைகள் மீண்டும் திறக்கப்பட்டனவாம்; இதனால் சுமார் 97,000 தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கிடைத்திருக்கிறதாம்.

## நாடு முழுவதிலும் சிமெண்டு தொழிலாளர் வேலைநிறுத்தம்

பம்பாய், ஆக. 18—

நம் நாட்டில் 54 சிமெண்டுத் தொழிற்சாலைகளைச் சேர்ந்த 60,000-த்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தம் தொடங்கினர்.

நாடு முழுவதிலும் சிமெண்டுத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

ஊதிய உயர்வு -- இடைக்கால நிவாரணம் ஆகியவை கோரி ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்திருக்கின்றனர்.

இந்த வேலைநிறுத்தத்தால் நாள்தோறும் ரூ 1 கோடி மதிப்புள்ள 46,000 டன் சிமெண்டு உற்பத்தி பாதிக்கப்படக்கூடுமாம்.

## ஆங்கிலத்தில் எழுத இடமில்லையாம்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று, ஓ பி. தியாகி என்ற உறுப்பினர் கேட்டதற்கு, அமைச்சர் பந்த், 'தலைமையமைச்சர் பெயரால் கொடுப்பது பொருத்தமானது என்று கருதப்பட்டதால் அப்படிச் செய்யப்பட்டது' என்று பதிலளித்தார்.

"விருதுவழங்க நிர்ணயிக்கப்பட்ட விதி முறைகளின்படி, 'மாப்பிளா' கலகத்தில் ஈடுபட்டவர்கள் விருதுபெற அருகதையற்றவர்களாவர்"

என்று, மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்தார்.

"ஆனால், ஆசாத் சிந்தபெள மற்றும் கடற்படைப் புரட்சியில் ஈடுபட்டவர்கள் விடுதலை வீரர்களாகக் கருதப்படுவர்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"இந்திய தேசிய இராணுவத்தில் (ஐ. என். ஏ,) சேர்ந்து போரிட்டு மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கும் தியாகிகள் மானியம் வழங்கப்படும்" என்று அமைச்சர் தெரிவித்தார்.

## பிறப்பு

பம்பாய் — மாதுங்கா லேபர் கேம்ப் பேரறிஞர் அண்ணா குறள் வளர்ச்சி மன்ற அவைத் தலைவர் திரு.பெ. வேலாயுதம் அவர்களின் துணைவியார் திருமதி தையல்நாயகிக்கு 20—7—72 அன்று ஓர் ஆண் மகவு பிறந்தது தாயும் சேயும் நலம்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 3 அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் (24, [illegible] சென்னை-10) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.